OS:16/2020

Date: 04.06.2024

பெயர் :முனுசாமி

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**- வாதிகள் தரப்பில்**

வழக்கு சொத்துக்கள் எனது தந்தை மாணிக்கத்திற்கு சுயார்ஜிதமான சொத்துக்கள் என்றால் எனது தாத்தா பணத்தையும் எனது தாயாரின் நகைகளையும் வைத்து எனது தந்தை பெயரில் கிரயம் பெறப்பட்டது. நாங்கள் செய்துகொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் பிதுராஜித சொத்துக்கள் என ஆவண வாசகங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை 1990 ம் ஆண்டு கிரயம் வாங்கும்போது 2 முதல் 5 பிரதிவாதிகள் அனைவரும் இளவர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நாங்கள் பள்ளியில் படித்துகொண்டிருந்தோம் என்றால் சரிதான். படித்துகொண்டே காட்டில் வேலைக்கு சென்றுகொண்டிருப்போம். எனது தாயாரின் நகைகளை வைத்துதான் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று எனது பதிலுரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை, இப்போதுதான் சொல்கிறேன். எனது தகப்பனார் இறந்தது பற்றி நான் தான் இறப்பு பதிவு செய்தேன் என்றால் சரிதான். அதேபோல் எனது தந்தையின் இறப்பிற்கு பின்னிட்டு வாரிசு சான்று கேட்டு நான் தான் மனு அளித்தேன் என்றால் சரிதான். வாரிசு சான்று மனுதாக்கல் செய்தபோது தாவா வாதியை வாரிசாக காட்டவில்லை என்றால் சரிதான்.

நான் வாரிசு சான்றுக்கு தாக்கல் செய்து சான்று பெற்றுள்ளேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வாரிசு சான்றிதழ் எனது தந்தை மாணிக்கத்தினுடையது என்றால் சரிதான். மேற்படி வாரிசு சான்றிதழ் வாதி தரப்பில் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் வாரிசு சான்று வாங்கியது பற்றி எனது வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வாதி முத்துலட்சுமிக்கு திருமணம் ஆகும்போது எனக்கு சுமார் 2 வயதிருக்கும் என்றால் சரியல்ல, 5 வயதிருக்கும். 5 வயதில் எனக்கு விவரம் தெரியுமா என்றால் தெரியும். பதிலுரை மற்றும் முதல் விசாரண வாக்குமூலத்தில் தாவா சொத்து எனது அயராத உழைப்பினால் வாங்கப்பட்டதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல வேலைக்கு போய் சம்பாதித்த பணத்தில்தான் வாங்கப்பட்டது.

எனது தந்தை காலமாண பின்னிட்டு வழக்கு சொத்துக்கள் முழுவதும் எனது தந்தையின் வாரிசுகளின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது தந்தை உயிருடன் இருந்த காலத்தில் வழக்கு சொத்துக்களை பொருத்து வாய்மொழி பாகப்பிரிவினை செய்துவைத்தார் என குறிப்பிட்டுள்ளேன். அது எந்த தேதியில் என குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் எனக்கு நினைவில் இல்லை. எனது பதிலுரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் எந்த தேதியில் ஏற்பட்டது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வாய்மொழி பாகப்பிரிவினையில் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பிரித்து விடப்பட்டது என எனது பதிலுரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒப்பம்/-DW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.